# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை (27-04-1993) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 150


# லலித் கொலையைப் பயன்படுத்தி இனக்கலவரத்தை தூண்ட முயற்சி!

## அரசு மீது குற்றச்சாட்டு

கொழுப்பு ஏப்ரல் 27

லலித் அத்துலத் முதலியின் கொலையுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி பிரசாரம் செய்வதன் மூலம் தெற்கில் தமிழருக்கு எதிரான இனக்கலவரம் ஒன்றை உருவாக்க அரசு முயற்சிக்கிறது.

—இவ்வாறு எதிர்க் கட்சிப் பிரமுகர்கள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

லலித் உயிரிழந்த இடத்துக்கு சற்றுத் தொலைவில் ஓர் இளைஞரின் சடலத்தைப் போட்டு—

சரியாக அடையாளம் காணப்படாத அந்த இளைஞரை தமிழர் என அவசரமாக அறிவித்து—

அவர் சயனைட் அருந்தி உயிரிழந்தவர் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் பொய்யாகப் பிரசாரம் செய்து—

லலித் படுகொலையால்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## லலித்துக்கு அஞ்சலி செலுத்த பிரேமாவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஏப். 27

சுட்டுக் கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலிக்கு இறுதி மரியாதை செலுத்த தம்மை அனுமதிக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த வேண்டுகோளை லலித்தின் உறவினர்கள் நிராகரித்து விட்டனர்.

லலித்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் தான் கூட வருவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்த போதிலும் பிரேமதாஸாவை அனுமதிக்க லலித்தின் உறவினர்கள் மறுத்து விட்டனர்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் வருகை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அவரை அழைத்து வரவேண்டாம் என லலித்தின் உறவினர்கள் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்தனர்.

இதன் பின்னர்—

வேறு ஓர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த — லலித்தின் மறைவுக்குத் துக்கம் தெரிவிக்கும் புத்தகத்தில்—கையொப்பம் இடுவதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா சென்றார்

அச்சமயம் அங்கு திரண்டிருந்த மக்கள் பிரேமதாஸாவுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். (உ-த-6)

### அதிகாரிகள், பிக்குமாருடன்

## லலித் வீடு சென்ற சிறில் பின் கதவால் தப்பினார்!

அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் பிரேமதாஸாவுக்கு நெருக்கமான பௌத்த குருமாருடன் லலித் அத்துலத் முதலியின் வீட்டிற்குச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினட் ஜெனரல் சிறில் ரணதுங்க, அங்கு திரண்டிருந்த லலித் ஆதரவாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகி லலித் வீட்டின் பின் வாசல் வழியே தப்பியோடினார்.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

லலித்தின் சடலம் அவரின் இல்லத்துக்கு வருவதற்கு முன்னர், லலித்தின் உறவினர்களைச் சந்திக்க சிறில் ரணதுங்க அங்கு சென்றபோதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது

இதேபோன்று—

(6 ஆம் பக்கம் பார்க்க)


லலித் கொலை பற்றிய மேலும் செய்திகள் 5 ஆம் பக்கத்தில்


## சடலமாகக் காணப்பட்ட அந்த இளைஞர் யார்?

### அடையாளம் காண்பதில் குளறுபடி

லலித்தை சுட்டுக் கொன்றவர் என்று பொலீஸாரால் சந்தேகிக்கப்பட்ட இளைஞரை அடையாளம் காண்பதில் குளறுபடி இடம்பெற்றிருக்கிறது

லலித் உயிரிழந்த இடத்துக்கு சுமார் 600 யார் தூரத்துக்கு அப்பால் கிருலப்பனை மூகலம் வீதிப்பகுதியில் இந்த இளைஞர் சடலமாகக் காணப்பட்டது தெரிந்ததே.

அவரிடம் காணப்பட்ட அடையாள அட்டையின்படி அவர் அப்பையா பாலகிருஷ்ணன் என்ற தமிழ் இளைஞர் என அடையாளம் காணப்பட்டதாக பொலீஸார் முன்னர் அறிவித்திருந்தனர்.

ஆனால் நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் — மேற்படி அடையாள அட்டை வேறு ஒருவருடையது என்று பொலீஸ் மா அதிபர் ஒப்புக்கொண்டார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தீங்கிழைக்கும் முயற்சியை லலித் உணர்ந்திருந்தார்!

சம்பவம் நடந்த தினத்தன்று கொழும்பு ஹல்ஸ் டோர்பில் லலித் கூட்டம் ஒன்றை நடத்தினார். அங்கு தமக்கு தீங்கு விளைவிக்க ஏதோ முயற்சி நடைபெறுகிறது என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

அதுபற்றி பொலீஸாருக்குத் தெரிவித்து, தமது திட்டங்களை மாற்றியமைத்து, தமது போக்குவரத்துப் பாதையை திடீரென மாற்றி அவர் கிருலப்பனைக் கூட்டத்துக்குச் சென்றார்.

—இப்படி பிரபல செய்தி விமர்சகர் ஒருவர் கொழும்பில் தகவல் வெளியிட்டார்.

### பதவி விலக கோரிக்கை

லலித்தின் உயிரைப் பாதுகாக்கத் தவறியதற்காக ஜனாதிபதி பிரேமதாஸாவையும், பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவையும் பதவி விலக வேண்டும் என காமினி திஸாநாயக்க கோரியிருக்கிறார்.

## நாடாளுமன்றத்தை உடன் கூட்டும்படி வற்புறுத்தல்

லலித் படுகொலையுண்டதை அடுத்து எழுந்திருக்கும் பதற்றமான சூழ்நிலை குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டும்படி சபாநாயகர் எம். எச். முகம்மதுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட இருகட்சிகள் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளன

சில தினங்களுக்கு முன்னர் கூடிய நாடாளுமன்றம் மே 23 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டிருப்பது தெரிந்ததே.

## நாளை இறுதிச் சடங்கு: வன்முறை வெடிக்கும்?

லலித் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்கு நாளை பொரளை கனத்தையில் நடைபெறவிருக்கிறது.

லலித்தின் படுகொலையால் ஆத்திரமடைந்திருக்கும் ஆதரவாளர்கள் நாளை இறுதிச் சடங்கின்போது தலைநகரில் அரசுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடக்கூடும் என அஞ்சப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் கருத்து வெளியிட்டன.

## இறுதிச் சடங்கின் போது ராணுவப் பாதுகாப்புத் தருக!

### காமினி திஸநாயக்கா கோரிக்கை

கிருலப்பனையில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டத்துக்கு பொலீஸார் உரிய பாதுகாப்பு வழங்காததால் லலித் சுடப்பட்டார், எனவே எமக்கு பொலீஸில் நம்பிக்கையில்லை

— இவ்வாறு அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

நாளை நடைபெறும் லலித்தின் இறுதிக் கிரியைகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கும்படியும் அவர் இராணுவத்தைக் கேட்டுள்ளார்.

### ★ காங்கேசன் பாதையைத் திறப்பது குறித்து

## சர்வதேசசெஞ். அதிகாரிகள் புலிகளை சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம் ஏப். 27

காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக வாகன அணி மூலம் யாழ். குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை எடுத்து வருவது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உயரதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தினர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டொமினிக் டுபோரும், யாழ். அலுவலகப் பிரதிநிதி ஜீன் பிராங்கொய்ங் சங்குவும் அப்பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

காங்கேசன் பாதை விடயம் குறித்து, திரு. டுபோர் யாழ் வருவதற்கு முன்னர் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்றும்—

யாழ் வரும் வழியில் பலாலியில் தங்கியிருந்த சமயம், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் குலதுங்கவுடனும் அவர் இந்த விடயம் பற்றிப் பேசினார் என்றும் தெரிவிக்கப்பட்டது

காங்கேசன்துறையூடாக உணவுப்பொருள்களைக் குடாநாட்டுக்குள் எடுத்துவரும் நடவடிக்கையை எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்பாக ஆரம்பிக்கவேண்டும் என்பதில் கூடிய அதிக அக்கறை [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மீட்புநிதி நாளை செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஏப். 27

இதுவரை தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் நாளை பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் வைத்து அதனைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகள்

மயிலணி, ஏப். 27

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கந்தரோடை ஸ்கந்தா ஐக்கிய வி. க அணியை எதிர்த்து சுன்னாகம் ஐயனார் வி. க. அணி மோதும். (உ-89)

o o o

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பதிவு செய்யாத கழகங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இளவாலை யங் ஹென்றியன் வி. க. அணியை எதிர்த்து ஏழாலை ஞானகலா வி. க. அணி மோதும்.

மற்றைய இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் வி. க. அணி மோதும்.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

o o o

யாழ். செயலகம் யாழ். மாவட்ட கழக அணிகளுக்கு இடையில் ஒழுங்கு செய்திருக்கும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் நாளை மறுதினமும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக ''ஏ'' அணியை எதிர்த்து ஷப்றா அணி மோதும்.

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக ''பி'' அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் வி. க அணி மோதும்.

# பஸ் ஆற்றுக்குள் விழுந்தது! களுத்துறையில் 25 பேர் பலி!!

கொழும்பு, ஏப். 27

களுத்துறையில் நேற்றுக் காலை 7.50 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 25 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

அளுத்கம - பலவத்தை வீதியில் சென்று கொண்டிருந்த அந்த பஸ் பாலத்தில் இருந்து குடைசாய்ந்து ஆறு ஒன்றினுள் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து நடந்த போது பஸ்ஸில் 40 பயணிகள் வரையில் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப், 27

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக நாளை திறக்கப்படவிருக்கின்றன பலாலி ஆசிரிய கலாசாலையும் விடுமுறைக்குப் பின் நாளை ஆரம்பமாகிறது. (உ-152)


## யாழ்ப்பாணக் கல்லூரி

JAFFNA COLLEGE — JESUS LIGHT — CHRIST OF THE LIFE — 1823 — 1872 — CEYLON

வட்டுக்கோட்டை

### பட்டப்படிப்புகள் பிரிவு

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக First in Arts (G. A. Q) விரிவுரைகள் 10 - 05 1993 திங்கள் பி. ப 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B. A. Part I விரிவுரைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

### பேராதனைப் பல்கலைக்கழகம்

★ G. A. Q - 1993 மீட்டல் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

★ G. A. Q - 1994 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

முதல்வர்
கல்லூரிப் பூங்கா

(சி/5052)



## வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? தேகமருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மாதவிடாய்க் கோளாறுகளா? குழந்தைகளின் பீடைகளா? இன்னும் எதுவானாலும் சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் அளிக்கப்படும்.

தினமும் } காலை 8.30 முதல் 12.30 வரை
பிற்பகல் 3.00 முதல் 6.00 வரை

டாக்டர் த. சிவானந்தன்

''சிவா வைத்தியசாலை''
384, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.

(2440)


## ஆலயங்களில்

தென்மராட்சி, ஏப். 27

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 27 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (இ-117)

o o o

யாழ். வண்ணை சிவன் கோவிலில் நாளை காலை 8 மணி முதல் சங்காபிஷேகமும், பிற்பகல் 5 மணி முதல் மணவாளக் கோல உற்சவமும் நடைபெறும். (உ)

## நாளை

யாழ்ப்பாணம், ஏப். 27

ஸ்ரீலஸ்ரீ மௌகுரு முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 88 ஆவது ஜெயந்தி விழா நாளை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலயத்தில் நடைபெறும். (உ)

o o o

குருநகர், ஏப் 27

யாழ் பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை மாலை 4-30 மணிக்கு சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் கருத்தரங்கம் நடைபெறும்.

''ஈழத்தில் சைவ சித்தாந்தம்'' என்ற தொடரில் இறுதியுரையை பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகளார் நிகழ்த்துவார். (உ-51)

## மாணவர் முத்திரைக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப் 27

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் கடந்த செப்டெம்பர், அக்டோபர், நவம்பர்—டிசம்பர் மாதங்களுக்குரிய மாணவர் உணவு முத்திரைக்கான பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை நாளை மறுதினத்துக்கு முன்னர் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 27

மாணவர் உணவு முத்திரை விநியோகம், அப்பியாசக் கொப்பிகள் விநியோகம், பாடசாலைகளின் அசையா அசையும் சொத்துகளின் விவரம், மே தின ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் கல்விக் கோட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றன.

வேலணைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கலந்துரையாடல் வேலணைக் கல்விக் கோட்ட அலுவலகத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கும்—

மருதனார்மடக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இராமநாதன் கல்லூரியில் நாளை புதன்கிழமை பி. ப. 2 மணிக்கும் — நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பற்றரிகள் கடத்த முயற்சி

கொழும்பு, ஏப். 27

பிரபல தொண்டர் ஸ்தாபனம் ஒன்று வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு இரு லொறிகளில் எடுத்துச் சென்ற பொருள்களில் தடை செய்யப்பட்ட பற்றரிகளும் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஈரற்பெரிய குளம் தடைமுகாமில் வைத்து இரு லொறிகளும் படையினரால் சோதனையிடப்பட்ட சமயமே பற்றரிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

# ம.எண்ணெயில் கலப்படம் செய்வோர் மீது நடவடிக்கை

## காவல்துறை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 27

மண்எண்ணெயில் கலப்படம் செய்ய வேண்டாம் இதனை மீறி செயல்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

தமிழீழக் காவல்துறை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய போராட்ட சூழ்நிலையில் சிங்கள அரசானது தமிழீழ மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை உலகம் நன்கு அறியும். இதில் பொருளாதாரத் தடை முக்கியமான தொன்றாகும்.

எமது மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் மண்எண்ணெயும் ஒன்றாகும். விவசாயம், கல்வி, வீட்டுப் பாவனை போன்றவற்றிற்கு மண்எண்ணெய் பெரிதும் பயன்படுகின்றது. ஆனால் சிங்கள அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் எமது மக்களுக்கு மிகவும் குறைந்தளவு மண்எண்ணெய்தான் கிடைக்கின்றது. அதனை எமது மக்கள் அதிக அளவு விலை கொடுத்தே வாங்க முடிகின்றது.

இந்த இக்கட்டான சூழ்நிலையை பயன்படுத்தி சில எண்ணெய் வர்த்தகர்கள் மண்எண்ணெயில் கலப்படம் செய்து விற்பனை செய்வதாக பொதுமக்கள் பலர் எமது காவல் பணிமனைகளில் புகார் செய்த வண்ணம் உள்ளனர். ஆகவே எமது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உடுவில் மறியல் போராட்டம்

# செயலகத்தில் இன்று காலை சமரசப் பேச்சு நடக்கும்

உடுவில், ஏப். 27

நிறுத்தப்பட்ட தமது நிவாரணத்தை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, வலிகாமம் தெற்கு மக்களில் சுமார் 940 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கடந்த ஒரு வாரகாலமாக நடத்திவரும் மறியல் போராட்டத்தை சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கான பேச்சுகள் இன்று யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க. சந்திரராசா செய்துள்ளார்.

மறியல் போராட்டம் நடத்தி வருவோரின் பிரதிநிதிகளும் உதவி அரச அதிபர் திரு. சந்திரராசாவும் இன்று காலை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

மறியல் போராட்டக்காரர்கள் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபரை நேற்று நேரில் சந்தித்து தமது குறைபாடுகளை விளக்கினர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் விடுமுறையில் இருப்பதால் அவர் செய்த முடிவுகளை தற்காலிகமாக கடமை புரியும் தன்னால் மாற்ற முடியாதிருப்பதாகவும்—

யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் மறியல் போராட்ட குழுவின் பிரதிநிதிகளை தொடர்பு படுத்தி வேண்டிய உதவிகளை செய்து தருவதாகவும் அப்போது அவர் உறுதி அளித்தார்.

ஏழாலை மத்தி, ஏழாலை கிழக்கு, புன்னாலைக்கட்டுவன், கும்பிளான் ஆகிய இடங்களை சேர்ந்த பல குடும்பங்களுக்கு கடந்த பெப்ரவரியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டதையடுத்து அவர்கள் கடந்த செவ்வாய்கிழமை முதல் உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறியல் போராட்டம் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை பூட்டப்பட்ட நிலையில் வேலைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (அ-152)

## செஞ்சிலுவை உபதலைவர் கொலை:

# கூட்டுப்படை அறிக்கையின் பின்னரே மேல் நடவடிக்கை

## சர்வதேசக் குழுவினர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப் 27

அண்மையில் அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இலங்கைச் செஞ்சிலுவை சங்க யாழ். கிளை உபதலைவர் புவனேந்திரன் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உத்தியோக பூர்வ அறிக்கை கூட்டுப் படைத் தலைமையகத்திடம் இருந்து கிடைத்ததும் அந்த விடயம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கை குறித்து தீர்மானிக்க முடியும்.

— செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். கிளைப் பிரதிநிதி திரு. ஜீன் பிராங்கொய்ஸ் சங்கு முன் கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை—

கடந்த சனியன்று யாழ். வந்தடைந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக் டுபோர் அச்சுவேலியில் திரு. புவனேந்திரன் கொல்லப்பட்ட பகுதியை சென்று நேரில் பார்வையிட்டார்.

அவருடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். கிளைப் பிரதிநிதி ஜீன் பிராங்கொய்ஸ் சங்குவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் டாக்டர் சிங்கராஜரும் சென்றிருந்தனர்.

சம்பவம் நடந்த விதம், மற்றும் எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியன பற்றியும் அவர்கள் கலந்து பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர்—

### புவனேந்திரன் இல்லத்துக்கு

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக் டுபோர் நேற்றுப் பிற்பகல் காலஞ்சென்ற புவனேந்திரனின் இல்லத்திற்குச் சென்று அவரது குடும்ப உறுப்பினர்களிடம் தமது ஜெனீவா தலைமையகத்தின் அனுதாபங்களைத் தெரிவித்தார்.

திரு. டொமினிக் டுபோர் தமது விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு செல்வதற்காக நேற்று மாலை இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (உ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கு பிரதான வீதிகள் புனரமைக்க நடவடிக்கை

அராலி, ஏப். 27
போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ள வலி - மேற்கு பிரதேசத்தில் பிரதான வீதிகளை செப்பனிடும் வேலைகளை வலி மேற்கு வர்த்தகர் சங்கம் விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

பானிப்பாய் - காரைநகர் வீதி, மற்றும சண்டிலிப்பாய் சந்தியில் இருந்து சுழிபுரம் காளுவன் சந்திவரை, சித்தன்கேணி சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சந்தி வரையிலான வீதிகள் தார் போடப்பட்டு செப்பனிடும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-12)

## நீக்கம்

இந்திரா காங்கிரஸின் முக்கிய தலைவர்கள் நால்வர் ஐந்து ஆண்டுகளுக்கு கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளான அந்த நான்கு பேரும் வருமாறு;

முன்னாள் வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங், முன்னாள் அமைச்சர்கள் பொட்டேடார், கே. என். சிங், திருமதி ஷீலா டிக்ஸிட்.

# ஆயர் கென்னத்துடன் யாழ்.வர பௌத்த குருமார் பின்னடிப்பு

கொழும்பு, ஏப். 27
அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் அதி வண. கென்னத் பெர்ணான்டோவுடன் யாழ்ப்பாணம் செல்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்த பௌத்த பிக்குமார் இப்போது பின்னடித்துள்ளதாகத் தெரி வருகிறது.

ஆயர் கென்னத் பெர்ணான்டோ மீண்டும் யாழ்ப்பாணம் செல்லத் திட்டமிட்டுள்ளார். அவர் தம்முடன் இரண்டு பௌத்த குருமாரையும், புத்திஜீவிகள் சிலரையும் அழைத்துச் செல்ல முயற்சி செய்து வந்தார்.

அவர்களைக் கூட்டிச் செல்வதற்கு விடுதலைப் புலிகளிடம் அனுமதியும் கேட்டிருந்தார்.

ஆனால் பௌத்த குருமார் இருவரும் இப்போது யாழ்ப்பாணம் செல்லத் தயக்கம் காட்டி வருவதாகச் சொல்லப்படுகிறது. பௌத்த குருமார் சங்கத்தினர் குறிப்பிட்ட பௌத்த பிக்குகள் இருவரும் யாழ்ப்பாணம் செல்வதை ஆதரிக்கவில்லை என்று அறியப்படுகிறது.

பௌத்த பிக்குகள் தயக்கம் காட்டிய போதிலும் ஆயர் கென்னத் பெர்ணான்டோ தாம் தனியாக யாழ்ப்பாணம் செல்வது சம்பந்தமான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-3)

# திருமலை-கொழும்பு வீதியில் சிங்களக் குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப் 27
திருமலை — கொழும்பு பிரதான வீதி நெடுகிலும் ஆங்காங்கே பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு, அவற்றைச் சூழ சிங்களக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக அங்கு அமைக்கப்படும் குடியிருப்புக்களுக்கு அரசு வழங்கும் உதவிகளை விட மேலதிகமான உதவிகளை பௌத்த குருமார் வழங்கி வருவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை—

கந்தளாய் பிரதேச செயலகம், தம்பலகாமம் பிரதேச செயலகம், உப்புவெளி, நாலாம் கட்டை 196 ஆம் கட்டை, முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகளிலும் தீவிர சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களை அழிக்கும் நோக்குடன் மேற்படி இடங்களில் இந்துக் கோவில்களுக்குச் சொந்த[illegible]மான நிலங்களில் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 27
தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் கடிதம் கிடைக்காதோர் தமது நியமனம் தொடர்பாகக் கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கு மகஜர் அனுப்பத் தீர்மானித்துள்ளனர். இம் மகஜர் பற்றிக் கலந்துரையாடுவதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் கூடவுள்ளதாக அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## மட்டக்களப்பில்:

# இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமரப் பணிப்பு

கொழும்பு, ஏப் 27
மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்திவெளி முதல் பெரிய போரதீவு வரையான பிரதேசங்களில், அப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சகஜ நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-எ)

## மே தினத்தில் ஒலிக்க இருப்பவை

★ கொடுங்கோண்மைக்கு சாவுமணி அடிக்க காவு ஆயுதத்தை.
★ வேண்டாம்! தங்குநிலைப் பொருளாதாரம்
வேண்டும் இங்கு சுயசார்புப் பொருளாதாரம்.
★ வீரமுண்டு, துணிச்சலுண்டு, வளமுண்டு, மண்டியிடோம்.
★ இங்கு வளமுண்டு! எனவே வாழ்வுண்டு!
★ எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், எமது மண்ணில்!

# இன்று முன்னணியில் உள்ள நாடுகள் பெரும் அழிவுகளைச் சந்தித்தவையே

## புத்தாண்டு தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 27
இன்று முன்னணியில் உள்ள நாடுகள் பல பெரும் அழிவுகளைச் சந்தித்தவையே. யாழ்ப்பாணம் போன்று ஜப்பானும் ஒரு காலத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்தது. ஆனால் இன்று ஜப்பான் சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

நல்லூர் பிரதேச புத்தாண்டு தினவிழாவில் உரை நிகழ்த்துகையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் இளங்கலைஞர் மன்றத்தில் இந்த விழா நடைபெற்றது.

பேராசிரியர் சண்முகதாஸ் விழாவில் மேலும் பேசுகையில்,

''எமது பங்களிப்பே விடுதலை வேண்டி நிற்கும் இந்த மண்ணின் இன்றைய தேவை. அழிவுகள் எமக்குப் புதிதல்ல. அழிவுகளின் மத்தியில் எமது கலாசார பொருளாதார வளங்களைக் கட்டியெழுப்பும் திடமான சிந்தனையும், செயற்பாடும் எமக்கு வேண்டும். இன்றைய புத்தாண்டு விழா இதற்கு அடிகோலும் என்பது எனது நம்பிக்கை என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பேசும் போது கூறியதாவது;

புக்காரா விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெறும் வேளையில்கூட, தமிழர்கள் தங்களுடைய பாரம்பரிய கலைகளும், கலாசாரமும் வளர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

எமது மண்ணின் விடிவிற்காக தம்மைத் தியாகம் செய்யும் மனவலிமை இந்த மண்ணுக்கேயுள்ள கொடையாகும்.

அல்லலுறும் மக்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களின் நல்வாழ்வுக்கு இந்தப் புத்தாண்டு வழி காட்டட்டும் என்றார்.

மற்றும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், வண. பிதா இராசநாயகம் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

புத்தாண்டு விழாவையொட்டி இடம்பெற்ற பேச்சு, கவிதை, கட்டுரை, நாட்டார் பாடல், கிராமிய நடனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகரும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை ஆணையாளர் திரு. பாலசிங்கமும் வழங்கினர். (இ-111-51)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 04 — 1950
மறைவு: 27 — 04 — 1979

### மகேசன் வரதராஜன்

எந்தநேரமும் சிரித்த நிலை-அதுதான் தெய்வக் களை-அதுதான் வரதன் உலகுக்கு விட்டுச் சென்ற செல்வம். தவழும் தாம்பூல சீலரான வரதனின் பவளச் செவ்வாயை நாம் இனிக் காண்பது எப்போ?

பிரிவால் துயருறும்;
மனைவி, மகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

''லிங்க வாசா'',
நவாலி.
(6136)

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

மலர்வு: 05—03—1916
உதிர்வு: 20—04—1991
திதி: 27 - 04 1993

அன்பு பொழிந்து, அமுதமொழிபேசி, ஆசைக்கரம் நீட்டி, எங்களை எல்லாம் ஆளாக்கிய அருமைத் தெய்வமே! பிரிவு இயற்கையானாலும் பிழிகிறது எம் நெஞ்சை. எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் இப்போது எங்களையே சுற்றி நிற்பீர்கள்! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்

என்றும் உங்கள் நினைவால் வாடும்:
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

369/1, K K. S. Road,
யாழ்ப்பாணம்.
(25410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சியாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சியாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள் தயாரிப்பாளர்கள் : கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். (25333)

## தாதிகள் தேவை

வைத்தியசாலைக்கு பெண் தாதிகள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் சான்றிதழ்களுடன் காலையில் சமுகமளிக்கவும். மெடிக்கல் சென்ரர், நவாலி தெற்கு, மானிப்பாய்.

(6'37)

## DRESS MAKING

பிரத்தியேக தையல் பயிற்சி எல்லா வித முறையில் வெட்டித் தைப்பதற்கும், எம்பிரோய்டறி, பூச் செய்தல், நிற்றிங் லேஸ் பின்னுதல், வர்ணம் தீட்டுதல், கோலம் இன்னும் பல கைவினைப் பொருள்கள், ஐசின் ஆகிய வகுப்புகளும் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 28-04-93.

(5896)

## பட்டதாரி சம்பளம்

கொழும்பு, ஏப். 27

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும், சேவைக் காலத்தின் போது பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்க மாகாணக் கல்வி அமைச்சு துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது. (த-எ)

## நஷ்டஈடு வழங்குவதில் கட்டுப்பாடு

கொழும்பு, ஏப் 27

வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு நட்ட ஈட்டுப் பணம் வழங்கக்கூடாது.

''ரேபியா'' நிறுவனத்துக்கு பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தி இருப்பதாக நம் பகமாகத் தெரிய வருகிறது

இத்தகவலை கொழும்பு வீரகேசரி வெளியிட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் கிடைத்த விண்ணப்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டால் மீண்டும் நட்டஈடு வழங்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தி இருப்பதாகக் கூறப்படுகிறது. (த-எ)

## விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ் வரும் பாடசாலைகளின் ஆய்வுகூடப் பணியாளர், காவலாளர், நூல் நிலையப் பணியாளர், பாடசாலைத் தொழிலாளர், சுகாதாரத் தொழிலாளர் ஆகிய நிரந்தரப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அண்மையிலுள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் நாளை 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

---

வடமராட்சியில்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில்

# யாழ்ப்பாண சயன்ஸ் அக்கடமி

## நிறுவன ஆசிரியர்கள் ஒன்றிணைந்த சேவை

தூய கணிதம் ] — திரு. வெக்ரர் வேலாயுதம்
பிரயோக கணிதம் ]
தாவரவியல் — திரு. குணசீலன்
பௌதீகம் — திரு. சோதிலிங்கம்
— திரு. கணேசன்
இரசாயனவியல் — திரு. சண்
— திரு. மணியம்
விலங்கியல் — திரு. பாலதாஸ்

ஆரம்பம்: 29 — 04 — 1993
பிற்பகல் 3-00— 6-30 வரை

(5370)

---

# விண்ணக வாழ்வின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 06 — 10 — 1926



இறப்பு: 27 — 04 — 1991

## அமரர் பி. அமிர்தம்

(வர்த்தகர், ஊர்காவற்றுறை)

பண்புடன் எமை வளர்த்த
பாசமிகு தந்தையே!
பார் விட்டு நீங்கள் சென்று
ஈராண்டு சென்றாலும்
எம் இதயங்கள் உள்ளவரை
அகலாது உங்கள் நினைவு.

குடும்பத்தினர், உறவினர்கள்.

முடவேம்பபடி,
சுன்னாகம்.

(25245)

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 12 — 05 — 1943



மறைவு: 28 — 01 — 1993

## வல்லிபுரம் குணலிங்கம்

(துரை)

(உரிமையாளர், ஊறணி - காங்கேசன்துறை சிவன் பேக்கரி)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
எங்கள் பாசத்தின் உறைவிடமே!
அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி - பண்பின்
சிகரமாய்த் திகழ்ந்த எம் தந்தையே!
எங்களை சீரும் சிறப்புமாக வளர்த்து ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டுச் சென்ற எங்கள் தந்தையே!
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் நினைவால் வாடும்!
மனைவி, மக்கள், சகோதர,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்,
நண்பர்கள்.

(6107)

---

# முருங்கையின் மகிமை

இதன் இலை, காய் இரண்டும் அதிகளவு இரும்புச் சத்து, விற்றமின்கள் நிறைந்தவை. இதை வாரத்துக்கு இரண்டு தடவை உணவில் சேர்த்துக்கொண்டால் குடலுக்கு வலுவைக்கொடுக்கும். வயிற்றில் உள்ள வாய்வை நீக்கும். இரத்தத்தில் சோகை ஏற்படாமல் பாதுகாக்கும்.

---

பரி. யோவான் கல்லூரி

## உலக சுற்றாடல் தினம்

# சித்திரப் போட்டி

*பங்குபற்றும் மாணவர்களுக்கான முக்கிய விவரங்கள்*

1. சித்திரத்துக்கான தலையங்கம்
   ''சூழல் மாசடைதல்''
2. வரவேற்கப்பட உள்ள சித்திர வகைகள்
   2.1 கேலிச் சித்திரம்
   2.2 சுவரொட்டிச் சித்திரம்
   2.3 புகைப்படக் காட்சிப் படம்
3. அளவு விவரம்
   18'' x 12'' (பிறிஸ்டல் போட்)
4. வர்ண விவரம்
   நீர் வர்ணம்
   கிறயோன் வர்ணம்
   போஸ்டர் வர்ணம்
5. கனிஷ்ட பிரிவு — 9, 10, 11 ஆம் ஆண்டு மாணவர்கள்
   மேற் பிரிவு — க. பொ. த. உயர்தர மாணவர்கள்
6. விண்ணப்ப முடிவு திகதி
   மே — 05 — 1993
7. அனுப்ப வேண்டிய முறை
   பாடசாலை அதிபரின் ஒப்பத்துடன் நேரில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

அதிபர்.
பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

27 - 04 - 1993

(சி-5027)

---

# 5ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



## கந்தவனம் தவக்குமார்

(லெப். முரளி சாள்ஸ்)

வீரஜனனம்: 10 - 04 - 1963

வீரமரணம்: 27 - 04 - 1988

முரளி நீ எமைவிட்டுப் பிரிந்து ஆண்டு 5 கடந்து விட்டது. ஆயின் நமது கண்ணீர் என்றும் வற்றாது; மறக்கவும் முடியாது. உன்னுடன் கூடி விண்புகுந்த கப்டன் மோகன்மாஸ்டர், இளம்புலி பட்சம் இருவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

உன்னை மறக்க முடியாத,
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, அக்கா, அத்தான்,
மருமக்கள் - நிலுஜா, நிரோஜன்,

''ஜெபமலரகம்'',
முரளி வீதி, கப்புதூ,
கரவெட்டி.

(25408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# கல்லில் நார் உரிக்கும் சாதனை

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தமது போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் கிளாலிக் கடற்பாதையை அரசாங்கம் தடை செய்துள்ளமை மனித உரிமை மீறலாகும். ஆகையால் கிளாலிப் பாதையால் பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அரசாங்க உயர்மட்டத்திடம் வலியுறுத்தி இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. தடையை நீக்க வேண்டும் என்ற அவர்களது நெருக்குதல்களால் அரசாங்கம் அதனைச் சாதகமாகப் பரிசீலனை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கைகளால் அழித்தும் துன்புறுத்தியும் வரும் சிங்கள அரசாங்கம் அவர்கள் அதற்கும் அஞ்சாது. மசியாது எதிர்த்து நிற்கத் துணிந்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டது. ஆகையால் அதற்கு அடுத்துப் பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை ஒன்றன பின் ஒன்றாகப் போட்டு தமிழர்களை அழுத்தி, அமிழ்த்தி, நெருக்கி அழித்துவிடக் கங்கணம் கட்டி நிற்கிறது.

தமிழ் மக்கள் தனது பிரசைகள் என்று பெயரளவில் உரிமை கொண்டாடிக் கொண்டு, இராணுவத் தாக்குதல், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை ஆகிய மூன்று மிகக்கொடிய ஆயுதங்களாலும் ஒரே நேரத்தில், சமகாலத்தில் தாக்கி நிட்டூரம் புரிந்து வருகிறது அரசு.

ஸ்ரீலங்கா அரசின் இந்த வேடத்தையும், அடக்குமுறைத் தந்திரங்களுடனான அழுத்தங்களையும் உலகம் கண்டும் காணாதது போல இருந்து வருகிறது. உண்மை நிலையை அறிந்து, ஸ்ரீலங்கா அரசைத் தட்டிக்கேட்க அக்கறை காடடாது பொய்களை நம்பி அதன் பக்கமே சார்ந்து நிற்கிறது. அத்தகைய நிலைப்பாட்டில் இருந்து விடுபட்டு, வெளிநாட்டுத் தூதுவர்கள் கிளாலிப் பாதை மீதான தடையை நீக்குமாறு வற்புறுத்த முனைந்திருப்பது ஒரு மாற்றமே.

ஆனால் அரசு அவர்களின் வற்புறுத்தலைப் பொருட்படுத்தி தடையை நீக்கிவிடும் என்று இலகுவில் எதிர்பார்க்க முடியுமா? காங்கேசன்துறையிலிருந்து வாகன அணி மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு எடுத்து வரும் முயற்சியையும், பூநகரிப் பாதையைத் திறந்து முதற்கட்டமாக உணவுப் பொருள்களைக் கொண்டுவரும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் முயற்சியையும் அரசு எவ்வாறு இழுத்தடிக்கிறது என்பது அனுபவம். நேரத்துக்கு நேரம் நிலைப்பாடுகளையும், நிபந்தனைகளையும் மாற்றிக் கொண்டு காலத்தைக் கடத்துவது கண்கூடு.

சம்பந்தப்பட்ட சர்வதேச நிறுவனங்களின் முயற்சிகளுக்குத் தான் தடையாக இருக்கவில்லை; சம்மதமே என்று காட்டிக்கொண்டு, மாதக் கணக்காக திட்டவட்டமான, நிச்சயமான செயற்பாடின்றித் தந்திரமாகக் காலங்கடத்திவருகிறது.

கிளாலி மீதான தடையை நீக்கும் விடயத்திலேனும் அது பெயரளவில் சம்மதம் தெரிவிக்காமல், தமிழ் மக்கள் உயிர் ஆபத்தின்றிப் பயணம் செய்ய வழிவிடுவதற்கு, இந்த முயற்சியில் இறங்கியுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும், சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களும் தூண்டுதல் அளித்து வெற்றி கண்டுவிட்டால், அவர்கள் கல்லில் நார் உரித்த சாதனை புரிந்தவர்களாகக் கருதப்படுவர்.

# தமக்கு ஆயுதங்கள் தருமாறு எதிர்க் கட்சிகள் கோரிக்கை

## ஈ.பி டி பியினரை இடம் மாற்றவும் வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 27

தமது கட்சிப் பிரமுகர்களின் பாதுகாப்புக்காக தங்களுக்கு ஆயுதங்களை வழங்குமாறு ஏழு எதிர்க்கட்சிகள் பாதுகாப்பு அமைச்சை வற்புறுத்திக் கேட்டிருக்கின்றன.

லலித் அத்துலத் முதலி கொலையை அடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்குறது.

எதிரணிப் பிரமுகர்கள் மற்றும் வேட்பாளர்களைப் பாதுகாக்க அரசு விரும்பவில்லை என்று தெரிவித்து, அதனால் தங்கள் பாதுகாப்புக்கு 400 ஆயுதங்கள் வரை வழங்க வேண்டும் என எதிரணிகள் கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசு சார்புப் பிரமுகர்களையும், அரசுக்கு ஆதரவான ஈ பி டி.பியையும் நிராயுத பாணிகளாக்க அரசு விரும்பவில்லை ஆகவே எங்கள் பாதுகாப்புக்கு எங்களுக்கு ஆயுதங்களைத் தாருங்கள் என்று நாம் கேட்கிறோம் என்றார் ஸ்ரீ.ல.சு.கவைச் சேர்ந்த எம். பியான நிமால் ஸ்ரீபால டி சில்வா.

இதேவேளை—

ஈ பி. டி. பியிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும்; ஈ. பி. டி. பியினர் தற்போது கொழும்பில் தங்கியுள்ள இடத்தில் இருந்து, வேறு இடத்திற்கு,—இராணுவப் பிரதேசத்துக்கு—மாற்றஞ் செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈ.பி,டி.பியினர் ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர் படையின் ஒரு பகுதியாக செயல்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர். (உ-எ-6)

## துப்பறியும் நிபுணர்கள் குழு வந்து சேர்ந்தது

லலித் அத்துலத் முதலியின் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை செய்ய அழைக்கப் பட்டுள்ள ஸ்கொட்லண்ட் யாரர்ட் துப்பறியும் நிபுணர் குழு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தது. (உ)

# இராணுவ நடவடிக்கை கிழக்கில் தீவிரமாகும்

யாழ்ப்பாணம், ஏப் 27

தென் தமிழீழப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவுள்ளதாக இராணுவ உயர்பீடம் அறிவித்துள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகம் அங்கு தீவிர கண்காணிப்பைச் செலுத்தும் என்றும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இதேவேளை —

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகலப் பகுதியில் தொடர்ந்து ''ஒப்பரேசன் சுமண — இரண்டு ' என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொளளப்பட்டு வருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (உ-5)

## இனக்கலவரத்தை ஏற்படுத்தி

# தேர்தலை தள்ளிவைக்க அரசு திட்டமிட்டு முயற்சி

## நாளை அறிவிப்பு வரலாம்

இனக்கலவரத்தை ஏற்படுத்துதன் மூலம் தேர்தலை தள்ளி வைக்க அரசு முயல்கிறது.

— இவ்வாறு கொழும்பில் செய்தியாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

தமக்குத் தோல்வி ஏற்படும் என அஞ்சுவதால் தேர்தலை தள்ளிப்போட அரசு முயல்கிறது.

நாளை ஜனாதிபதி பிரேமதாஸாவின் தலைமையில் வெள்ளவத்தையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

அக்கூட்டத்தில் சில வேளைகளில் தேர்தல் தள்ளிவைப்பது சம்பந்தமான தகவல் ஏதும் வெளியிடப்படக்கூடும் — இவ்வாறு அந்தச் செய்தியாளர் மேலும் தெரிவித்தார்

# ஐ. தே. க. மாநாட்டில் லலித்துக்கு அஞ்சலி

கொழும்பு, ஏப். 27

தொப்பேயில் நடைபெற்ற அத்தனகலை - தொம்பே ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் லலித்அத்துலத் முதலியின் மறைவுக்கு இருநிமிட மௌனாஞ்சலி செய்யப்பட்டது.

4ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் ஜனாதிபதி பிரேமதாஸாவும் கலந்து கொண்டார். (இ-எ)

# 30 பேர் மீது விசாரணை

லலித்அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக இதுவரை 30 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்று இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இம் முப்பது பேரில் நான்கு பேர் அளித்த வாக்கு மூலங்கள், விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குத் துணைபுரியும் என்று தாங்கள் நம்புவதாகவும் பொலீஸார் கூறினார்கள். (இ-எ)

## வேட்பாளரான நடிகை உட்பட

# லலித்துக்கு அஞ்சலி செய்த அறுவர் விபத்தில் மரணம்

## வாகனம் ஆற்றில் பாய்ந்தது

லலித் அத்துலத்முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, மாத்தளைக்கு திரும்பிக் கொண்டிருந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மாகாண சபை வேட்பாளரான பிரபல திரைப்பட நடிகை குமாரி செனவிரத்னா உட்பட ஆறு பேர் வாகன விபத்தொன்றில் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை அவர்கள் பயணம் செய்த வாகனம் அளவ்வை பாலத்தின் மீது வந்துகொண்டிருக்கையில் மகாஓயாவினுள் பாய்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வாகனத்தில் இருந்த அனைவரும் அந்த விபத்தில் உயிரிழந்தனர் என அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

# லலித் பெயர் வாக்குச் சீட்டில் செல்லுபடியற்றதாக்கப்படும்

மேல் மாகாண சபைக்கான தேர்தலில் கொழும்பு மாவட்டத்துக்கான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் முதலாவது வேட்பாளராக இருந்த அத்துலத் முதலியின் பெயர் வாக்குச் சீட்டில் செல்லுபடியற்றதாக்கப்படும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா செய்தியாளர் மாநாடு ஒன்றில் முன்கண்டவாறு கூறினார்.

''எனினும் விரும்பியவர்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்ட இலக்கத்துக்கு வாக்களிக்கலாம் ஆனால் அவருக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்கு எண்ணப்படமாட்டாது. அவரின் பெயரில் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகள் மட்டும் கணக்கில் எடுக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

# யாழ். பொறியியல் பீடம் கொழும்பில் இயங்கும்?

யாழ்ப்பாணம், ஏப் 27

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தை கொழும்பில் ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆகஸ்ட்டில் நடந்த ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சையிலும் —

1991 ஏப்பிரலில் நடந்த விசேட ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையிலும் சித்தி அடைந்து பொறியியல் துறைக்கு பல்கலைக்கழக அனுமதிபெறத் தகுதி பெற்ற 40 தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டி இருப்பதை அடுத்தே கொழும்பில் இதனை ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆராய்ந்து செய்து வருகிறது.

தற்சமயம் இயங்கும் பேராதனை, கட்டுப்பெத்தை பொறியியல் பீடங்களுக்கு மேலும் மாணவர்களை அனுமதிக்க வசதி இல்லாத காரணத்தாலேயே இம் முயற்சியில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

கிளிநொச்சியில் இப் பீடத்தை அமைக்க முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும்-

கட்டட வசதி, ஆய்வு கூட வசதி ஆகியவற்றை உடனடியாக அங்கு ஏற்படுத்த முடியாது இருக்கிறதாம்.

கொழும்பில் இந்தப் பீடத்தை ஆரம்பிப்பதன் மூலம் கொழும்பு திறந்த பல்கலைக்கழக ஆய்வு கூடத்தை பயன்படுத்த முடியும் என்றும் —

நிலமை சுமுகமடைந்த பின்னர் பொறியியல் பீடத்தை கிளிநொச்சிக்கு மாற்ற முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்துடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேசியுள்ளதாகவும் தெரிய வந்தது. (இ-3)

## லலித் கொலை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆத்திரமுற்றிருக்கும் சிங்கள மக்களை தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டு இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்த அரசு முயல்கின்றது — என்று பல எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி இளைஞரின் சடலத்தை பரிசோதனை செய்த கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் அல்விஸ் தமது பிரேத பரிசோதனை அறிக்கையைத் தயார் செய்து கொண்டிருப்பதாகவும் —

இன்னமும் அதனைத் தாம் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் அதற்கிடையில் மேற்படி இளைஞர் சயனைட் அருந்தி உயிரிழந்தார் என்று பொலீஸார் முடிவு செய்து அறிவித்திருப்பது விஷமத்தனமான நோக்கம கொண்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டது

பொலீஸாரின் தகவலை அரசு சார்புப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதே சமயம் —

லலித் கொல்லப்பட்ட போது அருகில் இருந்த முக்கிய நபர் ஒருவர் தமக்குத் தகவல் தருகையில், கிருலப்பனை மூகலம் வீதியில் சடலமாகக் காணப்பட்டவர் லலித்தைச் சுட்ட கொலையாளி அல்லர் எனத் திட்டவட்டமாகத் தம்மிடம் தெரிவித்திருப்பதாக பிரபல பத்திரிகையாளர் ஒருவர் கொழும்பில் தகவல் வெளியிட்டார்.

சடலமாகக் காணப்பட்ட இளைஞரே லலித்தைச் சுட்டார் என சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபரை மேற்கோள்காட்டி அரசு சார்பு தொடர்பு சாதனங்கள் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சுயதொழில் கடன்

கொழும்பு. ஏப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இளைஞர். யுவதிகள் மற்றும் விதவைகளுக்கு சுய தொழில் கடன்களை சமூக நலத்துறை அமைச்சு 24 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

# உலர் உணவு நிவாரணம்

மானிப்பாய் ப நோ. கூ. சங்க கிளைகளில், கடற்றொழிலாளர் மற்றும் மேசன் தொழிலாளர் ஆகியோருக்கான மூன்று கட்ட உலர் உணவு நிவாரணம் ஒரே தடவையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

## சடலமாகக் ..

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து—

கடந்த இரு நாட்களாக மேற்படி இளைஞர் தொடர்பாக அரசு மேற்கொண்ட பிரசாரம் தவறானது என்பதை தெளிவுபடுத்தி மீளப் பிரசாரம் செய்யும்படி எதிர்க் கட்சிகள் பொலீஸ் மா அதிபரிடம் கோரின.

குறிப்பிட்ட அடையாள அட்டையானது, சடலமாகக் காணப்பட்ட இளைஞருடையது அல்ல என்று தெரிய வந்ததை அடுத்து—

உயிரிழந்த இளைஞர் யார்? அவர் தமிழரா? அல்லது சிங்களவரா? — என்று கூற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை நகரப் பகுதியில் சுற்றிவளைப்பு, தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 27

திருகோணமலை நகரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முப்படையினரும் இணைந்து பெரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அன்றைய தினம் காலை முதல் திருமலை நகரில் பல இடங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் —

மடத்தடி, சிவன்கோவிலடி, சின்னக்கடை, பிரதான வீதி, மத்திய வீதி, பெரிய கடை ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்பை அடுத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வீடுகளில் ஒருவரை விட்டு விட்டு ஏனையோரை சென் ஜோசப் கல்லூரிக்குச் சென்று தங்குமாறு ஒலிபெருக்கி மூலம் படையினர் அறிவித்தனர் என்றும் —

அதனை அடுத்து இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் அங்கு சென்று தங்கியதாகவும் —

பின்னர் அவர்கள் அனைவரும் முகமூடி அணிந்த நபர்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முகமூடிகளால் அடையாளம் காட்டப்பட்ட பலர் விசாரணைக்காகப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டதாகவும் —

ஏனையோர் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பல மாதங்களின் பின்னர் திருமலை நகரில் நடந்த இத்திடீர் நடவடிக்கையால் நகரில் பதற்றம் நிலவியதாகவும் தெரியவந்தது.

# இந்திய பயணிகள் விமானம் நடுவானில் வெடித்து வீழ்ந்தது

## 75 பேர் பலி; 43 பேர் மீட்கப்பட்டனர்

புதுடில்லி, ஏப். 7

இந்தியன் எயர்லைன்ஸுக்குச் சொந்தமான போயிங் பயணிகள் விமானம் ஒன்று நேற்று பிற்பகல் ஔரங்கபாத்தில் நடுவானில் வெடித்து விபத்துக்குள்ளாகியதில் குறைந்தது 75 பேர் உயிரிழந்தனர்; 43 பேர் உயிர் தப்பினர்.

விபத்துக்குள்ளான சமயம் அந்த விமானத்தில் 6 விமான சிப்பந்திகள் உட்பட 118 பேர் இருந்தனர்

உயிரிழந்தவர்களில் 69 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

புதுடில்லியில் இருந்து பம்பாய் செல்லும் வழியில் அவ்விமானம் ஔரங்கபாத்தில் தரித்து நின்ற பின்னர் மீண்டும் புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளாகியது.

விமானம் தரையை விட்டுக் கிளம்பி அறுநூறு அடி உயரத்தை எட்டிய போது அது மூன்று துண்டுகளாக வெடித்து விழுந்து எரியத் தொடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தின் இயந்திரங்களில் ஒன்று திடீரென தீப்பிடித்ததை அடுத்தே அது எரியத் தொடங்கியதாகக் கருதப்படுகிறது.

[உ-எ]

# மாணவர் வளர்க்கும் மரங்களுக்கு நேரும் கதி!

## மக்களுக்கு உணர்வு எப்போது வரும்?

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நட்டுப் பராமரிக்கப்படும் மரக்கன்றுகளை சிலர் சேதமாக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மரக்கன்றுகளை கால்நடைகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக அடைக்கப்பட்ட மட்டைகளைப் பலரும் விறகுத் தேவைக்காக பிடுங்கிக் கூடுகளை அழித்து விடுகிறார்கள்; மற்றும் பலர் பாடசாலை மாணவர்கள் பாடுபட்டு நட்டுப் பராமரித்து வரும் மரக்கன்றுகளையே பிடுங்கிச் சேதமாக்கி விடுகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு யாழ். மாவட்டம் முழுவதிலும் மரக்கன்றுகளை நட்டு மாணவர்களின் உதவியுடன் பராமரித்து வருகிறது. ஏனைய பல நிறுவனங்களும் மரங்களை நட்டுப் பராமரித்து வருகின்றன —

மரங்களின் மகிமை தெரியாதவர்கள் தமது அப்போதைய தேவை கருதி அவற்றைச் சேதப்படுத்துகின்றனர். போர்க்கால சூழ்நிலையில், பல சிரமங்களின் மத்தியில், குறிப்பிடத்தக்க நிதியை ஒதுக்கி மரங்களை வளர்த்துச் சூழலைப் பாதுகாக்க முயற்சி எடுக்கிறோம் ஆனால் அதனைப் புரிந்து கொள்ளாமல், தேசநலனுக்கு விரோதமாக பொதுமக்கள் பலரும் செயற்படுவது கவலைக்குரியதாகும் — என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சூழலைப் பேணுவதிலும், மழையைப் பெய்விப்பதிலும் மரங்களுக்கு உள்ள பிரதான பங்கை உணர்ந்து மக்கள் அவற்றை வளர்க்க உதவுவது அவசியம். சுயநலனைவிட தேச நலனுக்கு முதன்மை தருவதற்கு எமது மக்கள் பழகுவது எப்போது? (அ)


★ கடற்புலிகள் ★

கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன்

நினைவாக கடற்புலிகளின்

## கடல் விளையாட்டுப் போட்டி

காலம்:- 04-05-1993 (செவ்வாய்க்கிழமை)
காலை — 6 00 மணி

நிகழ்ச்சிகள்:

1) நீச்சல்
200 M — ஆண்கள்
50 M — ,,
4 x 100 M அஞ்சல் ஓட்டம் — ,,
4 x 200 M ,, ,, — ,,
50 M சுழி ஓட்டம் — ,,
100 M நீச்சல் — பெண்கள்

2) கட்டுமரம் வலித்தல் — மூங்கில் (இருவர்)
கட்டுமரம் வலித்தல் — பலகை (இருவர்)
3) பந்து கடத்தும் போட்டி — (Water Polo) 7 பேர்
4) தலையணைச் சண்டை —
5) மல்யுத்தத்துடன் இணைந்த குத்துச் சண்டை (மூன்று பிரிவுகளாக)
6) கயிறு இழுத்தல் — ஆண்கள் 7 பேர்
கயிறு இழுத்தல் — பெண்கள் 7 பேர்
7) சங்கீதக்கதிரை — பெண்கள்

விண்ணப்ப முடிவு திகதி:- 02-05-1993

தொடர்பு முகவரி:- ரஞ்சன் பூங்கா,
மாவீரர் பொது நூலகம்
1 ஆம் கட்டை,
பருத்தித்துறை.

குறிப்பு: கடலில் காவியம் படைத்த கடற் கரும்புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட கடற்புலிகளின் விசைப்படகுகளின் வெள்ளோட்டம் 04 05 93 பிற்பகல் இடம்பெறும்.

(25413)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு தெய்வானை

காரைநகர் இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும், நவாலி தெற்கு, நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு தெய்வானை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற முருகேசுவின் மனைவியும், சரஸ்வதி, அருளானந்தம், தனபாக்கியம் ஆகியோரின் தாயாரும், அருணாசலம், பத்மாவதி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மாமியும், தர்ஷினி, மயூரன், குணசீலன், யசோதா, கம்சிகா, பாலசூரியன், மதவதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (27 - 04 - 93) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பிற்பகல் 1-00 மணியளவில் கொத்துக்கட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மு. அருளானந்தம் (மகன்)

நவாலி தெற்கு.
நவாலி
(25419)

### முத்துநாயகம் காசிப்பிள்ளை

உசன், முத்துநாயகம் காசிப்பிள்ளை (நாயக்கா) காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் மறவன்புலவு ஆறுமுகம் காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரனின் அருமைத் தாயாரும், திருமதிகள் செல்லமுத்து பெரியதம்பி, கனகபூரணி கந்தையா, யோகாம்பாள் கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார் இவரது ஈமக்கிரியை 26 - 04 - 93 திங்கள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெ. செல்லமுத்து (சகோதரி)

'நாயகலொட்ஜ்'
உசன்,
மிருசுவில்.
(25411)

### யோண்பிள்ளை மலக்கியாஸ்

யோண்பிள்ளை மலக்கியாஸ் (இளைப்பாறிய பிஸ்கால் ஊழியர்) காலமாகி விட்டார். இவர் மொனிக்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யோண்பிள்ளை, றெஜீனா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கராயர், மரியப்பிள்ளையின் அன்பு மருமகனும, காலஞ்சென்ற யோசவ் றோசலின், றீற்றா பேபி, தேவதாஸ் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வேதநாயகம், மரியநாயகம், சேவியர், காலஞ்சென்ற போஜிபா, கலாசியோண் (R M P), லூர்த்துராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (27-04-93 4.30 மணியளவில் நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி. M. மலக்கியாஸ்

10/2 கொண்டடி வீதி,
யாழ்ப்பாணம்.
(25418)


# உற்பத்தி எழுச்சி இறுதிபோட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 27

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளின் வட்ட மட்டத்திலான இறுதிக்கட்டப் போட்டிகள் இன்று நடைபெற உள்ளன.

ஊரெழு அம்மன் கோவிலில் இன்று காலை 9 30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

துலா பட்டை கொண்டு நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனைமரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், உணவுப் பண்டங்கள் தயாரித்தல் உட்பட மற்றும் பல போட்டிகள் இடம்பெறும். (அ)

## லலித் வீடு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அரசு சார்பு வேட்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் ஆகியோரையும் லலித் வீட்டுக்குள் செல்ல அங்கு கூடியிருந்த மக்கள் அனுமதிக்கவில்லை.

எனினும் —

லலித் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது முப்படைகளிலும் உயர்தட்வி வகித்த அதிகாரிகளை லலித்தின வீட்டுக்குள் சென்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த அங்கு திரண்டிருந்த மக்கள் அனுமதித்தனர்.

## சர்வதேச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சங்க சர்வதேசக் குழுவின் யா. கிளை அதிகாரி நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

(உ-இ-5)

## ம.எண்ணெயில்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறான மக்கள் விரோத செயல்களில் ஈடுபடவேண்டாம் என சம்பந்தப்பட்ட வர்த்தகர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-த)


## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் பரமேஸ்வரி

திருமதி மயில்வாகனம் பரமேஸ்வரி காலமானார்.

அன்னார் செல்லையா மயில்வாகனத்தின் (ஓய்வு பெற்ற முன்னைநாள் அதிபர் முல்லைத்தீவு மல்லாவி மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், பவானி மதியாபரணம், காலஞ்சென்ற கருணேந்திரன் (கிராம சேவையாளர் புத்துவெட்டுவான்), வாணி தியாகராசாவின் அன்புத் தாயாரும். மதியாபரணம் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், மன்னார்), இராசராஜேஸ்வரி (திருநெல்வேலி), தியாகராசா (லிபியா) ஆகியோரின் அன்பு மாமியும் சுந்தரேசன், உரோமேசுதன், நேசகாந்தன், வாசுகி, காயத்திரி, கருணராஜ் கருணதாஸ், கருணகாந், கோவர்த்தினி, கோசவரூபி, கேசவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர் வ. சிவபாலசிங்கம், திருமதி பத்மநாதன், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3.0 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. மயில்வாகனம்

''அருளீச்சரம்''
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு.
யாழ்ப்பாணம்.
(25420)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org